வீடியோ கமரா,
T. V. வீடியோ டெக்
ஆகியவற்றை
உத்தரவாதத்துடன்
உடனுக்குடன்
திருத்திக் கொள்வதற்கு

எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

நாங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

உங்கள் இல்லங்களில்
நிகழும்
மங்கள நிகழ்வுகளின்
நவீன முறையில் வீடியோ
படப்பிடிப்பிற்கு

எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 28 புதன்கிழமை (12– 01 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 47

# ஆளும் கட்சி - இ. தொ. கா. உறவு: மிக நெருக்கடியான கட்டத்தில்!

## தொண்டமானின் பேரனை கைது செய்யும்படி உத்தரவு

கொழும்பு, ஜனவரி 12

ஆளும் ஐக்கியதேசியக் கட்சிக்கும், அரசில் அங்கம் வகிக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் இடையில் நிலவிவந்த நெருக்கடி உச்சக் கட்டத்தை அடைந்திருப்பதை அடுத்து அரசிலிருந்து இ. தொ. கா. வெளியேறுவது பெரும்பாலும் உறுதியாகியிருப்பதாக அவதானிகள் தெரிவித்தனர்.

நிலைவரத்தை மாற்ற சரியான நடவடிக்கை எடுக்காவிட்டால் உறவில் வெடிப்பு ஏற்படும் என இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமான் ஐ. தே. க பொதுச் செயலாளர் திரு. சிரிசேன குரேக்கு எழுதிய கடிதத்தில் எச்சரித்திருக்கிறார்.

இதற்கிடையில் —

அமைச்சர் தொண்டமானின் பேரனும் இ. தொ. காவின் நிதிச் செயலாளருமான ஆறுமுகம் தொண்டமான், நிர்வாகச் செயலாளர் ஏ.எம். டி.ராஜன், மத்திய மாகாண சபை உறுப்பினர் என். கந்தசாமி ஆகியோரைக் கைது செய்யும்படி பொலீஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

தனது அலுவலகம் கொள்ளையிடப்பட்டதாகத் தெரிவித்து இ.தொ.கா. பொதுச் செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி கொள்ளுப்பிட்டிப் பொலீஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொண்டமானுக்கு விசுவாசமான இம்மூவரையும் கைது செய்யும் உத்தரவை கொள்ளுப்பிட்டிப் பொலீஸார் கடந்த வியாழக்கிழமை பிறப்பித்தனர்.

இம்மூவரும் அச்சமயம் கொட்டகலையில்தொண்டமானுடன் இருந்தனர். நுவரெலியா மாட்டத்தில் உள்ள டிம்புல பொலீஸாருக்கு அவர்களை கைது செய்யும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தகவல் கிடைத்ததும் அமைச்சர் தொண்டமான் பிர

(3ஆம் பக்கம் பார்க்க)

## மடுவில் மீண்டும் பணியாற்ற ஐ.நா. தூதரகம் முடிவு

மடு அகதி முகாமைப் பராமரிக்கும் பணியை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் மீண்டும் பொறுப்பேற்க விருப்பதாக கொழும்பு தகவல்கள் தெரிவித்தன.

மடு அகதி முகாமில் தங்கியுள்ள 32 ஆயிரம் அகதிகளின் நலன்களைக் கவனித்து, பராமரிக்கும் பணியை மேற்கொண்டு வந்த அமைப்பு, கட்த்த நவம்பர் மாதம் 9 ஆம் திகதி முதல் அந்தப்பணியை நிறுத்தியிருந்தது.

மீண்டும் இப்பணியை மேற்கொள்ள இந்த அமைப்பின் ஜெனிவா தலைமையலுவலகமும் கொழும்பு அலுவலகமும் முடிவு செய்துள்ளதாகவும்—

இதன்படி விரைவில் மேற்படி அமைப்பின் அதிகாரிகள் அங்கு வந்து சேர விருப்பதாகவும்—கொழும்பு தகவல்கள் தெரிவித்தன. (உ–3)

## 4 ஆயிரம் ஈழ அகதிகள் தாயகம் திரும்புவர்

கொழும்பு, ஜன. 12

தமிழகத்தில் இருந்து 4 ஆயிரம் இலங்கை அகதிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் தலைமன்னாருக்கு அனுப்பப்படவிருக்கின்றனர்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகளும், மன்னார் அரச அதிபரும் இந்த அகதிகள் வருகைக்கான ஏற்பாடுகளைக் கவனித்து வருகின்றனர்.

இதற்கிடையில் அகதிகளுக்கான ஐ.நா தூதரக அதிகாரிகள் மூவர் இன்று மன்னாருக்கு வரவுள்ளனர். (ஒ-3)

### மாவட்டங்கள் தோறும்

## தேர்தல் பிரசாரத்திற்கு அமைச்சர்கள் 24 பேர்!

கொழும்பு, ஜன. 12

24 மாவட்டங்களிலும் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ள 24 அமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

ஐ.தே.க, வட்டாரங்களை மேற்கோள்காட்டி சண்டே ரைம்ஸ் இத்தகவலை வெளியிட்டது.

அடுத்த மாதம்இடம்பெறும் அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் இந்த அமைச்சர்கள் யார் என்பது வெளியிடப்படும் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

கல்வி, உயர்கல்வி, நிதி மற்றும் பொதுநிர்வாகம் ஆகியவற்றுக்கு புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## தாய்லாந்து தூதராக சிசில் நியமனம் பெறுவார்

பதவியிழந்த இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்தின தாய்லாந்து நாட்டுக்கான இலங்கைத் தூதராக நியமிக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது தாய்லாந்தில் இலங்கைத் தூதராக இருக்கும் திரு.எச்.ஸி.குணவர்த்தனாவைக் கடந்த வாரம் சிசில் சந்தித்து தாய்லாந்து நாடு பற்றி அறிந்து கொண்டார் என்றும்—

பின்னர் கடந்த 4 ஆம் திகதி வெளியுறவு அமைச்சுக்குச் சென்று ராஜதந்திரியாகப் பணிபுரிவதற்குத் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டார் என்றும் "சண்டே ரைம்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. (ஒ-எ)

## ஆயுத பாணிகள் சுட்டதில் 4மீனவர் பலி; அறுவர்காயம்.

### நற்பிட்டிக் கடலில் சம்பவம்

கொழும்பு, ஜன. 12

வடமேற்கு கடற்பிரதேசத்தில்—நற்பிட்டிக் கடலில்—புத்தளத்தில் இருந்து சுமார் 50 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள உதிரமலைப் பகுதியில் மீனவர்கள் மீது ஆயுதபாணிகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் நான்கு மீனவர்கள் உயிரிழந்தனர். ஆறு பேர் காயமடைந்தனர். அவர்களில் ஒருவரின் நிலை ஆபத்தான கட்டத்தில் உள்ளது.

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சிச் செய்தி நிறுவனங்கள் இத்தகவலை வெளியிட்டன.

மூன்று படகுகளில் சென்ற 18 மீனவர்கள் மீது பத்தர மங்கலத் தீவிலிருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ–3–6)

## சகடை விமானக் கொள்வனவு: சீன இராணுவக் குழு வரும்

கொழும்பு, ஜன. 12

வடக்கு - கிழக்கு யுத்த நடவடிக்கைக்கு பாவிப்பதற்கென சீன விமானங்களைக் கொள்வனவு செய்வதில் ஸ்ரீலங்கா அரசு ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதற்கட்டமாக வை – 8 ரகத்தைச் சேர்ந்த சிறியரக சகடை விமானங்களை விற்பனை செய்ய சீனா சம்மதித்துள்ளது.

இந்த விமான விற்பனை தொடர்பாக ஸ்ரீலங்கா விமானப்படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவதற்கு சீன இராணுவ தூதுக்குழுவினர் இலங்கை வரவிருக்கின்றனர்.

முன்னர் சீனாவிடம் கொள்வனவு செய்த வை – 8 ரக விமானம் ஒன்று புலிகளுடனான யுத்தத்தின் போது இயக்கச்சிப் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

மிகப் பழையதும், இந்த யுத்தத்துக்கு பயன் இல்லை எனக் கருதியும் இலங்கை அரசு இந்தரக விமானகொள்வனவை இடைநிறுத்தி இருந்தது.

ஆனால் ஸ்ரீலங்கா விமானப் படையைத் திருப்திப்படுத்த வை – 8 விமானத்தை கடன் அடிப்படையில் வழங்கவே இக்குழு இங்கு வருவதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## கொழும்பு மாநகர மேயராக கணேசலிங்கம் பதவி ஏற்பு

கொழும்பு, ஜன. 12

கொழும்பு மாநகரசபையின் பிரதி மேயராக இதுவரைப் பணியாற்றிய திரு. செ. கணேசலிங்கம் மாநகர மேயராக நேற்று பதவியேற்றார்.

இதுவரை மேயராகக் கடமை புரிந்த ரட்ணசிறி ராஜபக்ஸ முதல்வருக்குரிய கடமைகளில் இருந்து இடை நிறுத்தப்பட்டதை அடுத்தே திரு. கணேசலிங்கம் மேயராகப் பதவியேற்றார்.

திரு. ரட்ணசிறி ராஜபக்ஸவுக்கு எதிராக ஊழல், வீண் விரயம், நிர்வாகச் சீர்கேடு ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன என்பது தெரிந்ததே.

இக்குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்படும் வரை அவரது கடமைகளில் இருந்து அவரைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் உத்தரவை மேல்

(3ஆம் பக்கம் பார்க்க)

### தென் மாகாணசபைத் தேர்தல்:

## சிறிமாவுடன் இணைந்து காமினி கட்சி போட்டியிடும்

தென்மாகாண சபைக்கான தேர்தலில் ஸ்ரீ.ல.சு.க. தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, காமினி திஸாநாயக்காவின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து கதிரைச் சின்னத்தில் போட்டியிடவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிரணியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக ஐந்து பேர் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தேர்தலுக்கான வேட்புமனுக்கள் அடுத்த வாரம் முதல் ஏற்கப்படவிருக்கின்றன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் இணைந்து போட்டியிட்டால் அது ஐ.தே. கட்சிக்கு பெரும் சவாலாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. (உ–3–6)

## ஐ.தே.க: செயற்குழுவில் அனுராவுக்கும் இடம்!

கொழும்பு, ஜன. 12

ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை வகுக்கும் உயர் குழுவான— செயற்குழுவில்— அனுரா பண்டாரநாயக்காவையும் இணைத்துக் கொண்டுள்ளார் ஜனாதிபதி விஜேதுங்க.

அனுராவை விட, அமைச்சர் சந்திரா பண்டார மற்றும் ரோஹித போகொல்லகம ஆகியோரையும் ஜனாதிபதி ஐ.தே.க. செயற்குழுவுக்கு நியமனம் செய்துள்ளார்.

இதேவேளை செயற்குழுவில் ராஜாங்க அமைச்சர் ஏ.ஜே. ரணசிங்க மீண்டும் நியமிக்கப்படவில்லை.

இவருக்கு எதிராக ஒழுங்காற்று நடவடிக்கை விசாரணை நடைபெறுவதைத் தொடர்ந்தே இம்முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

### முச்சந்தி முரளி

அம்மையாரின்ரை மைந்தனுக்கு பச்சைக் கட்சியிலை படுசெல்வாக்கு எண்டு சொல்லுங்கோ.....!

## திருமலையில் சுற்றிவளைப்பு

கொழும்பு, ஜன. 12

திருகோணமலை செல்வநாயகபுரம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலீஸ் மற்றும் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டது. பலத்த தேடுதல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

பெரும்பாலான மக்கள் அன்புவழிபுரம் கலைமகள் வித்தியாலயத்துக்கு அனுமக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

இவர்களில் சிலர் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ–3)

## பாதுகாப்பு அமைச்சரின் வேலை பிரதமர் ரணிலிடம்!

கொழும்பு, ஜன. 12

பாதுகாப்பு அமைச்சர் பதவியை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தம்வசம் வைத்திருந்த போதிலும் அவருக்காக — அவரின் சார்பில் — பாதுகாப்புத் துறையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவே மேற்பார்வை செய்து வருகிறார்.

கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று இத்தகவலை வெளியிட்டது.

இராணுவக் கட்டமைப்பில் செய்யப்படும் மாற்றங்களையும் பிரதமர் ரணிலுடன் கலந்தாலோசித்தே புதிய இராணுவத் தளபதி ஜெரிடி சில்வா மேற்கொண்டு வருகிறார்.

கடந்த புதன்கிழமை பிரதமர் ரணில், புதிய தளபதியுடனும் மற்றும் சிரேஷ்ட படை அதிகாரிகளுடனும் தற்போது நடக்கும் யுத்தத்தின் அணுகுமுறைகள் குறித்து ஆலோசனை நடத்தினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

வடக்கு - கிழக்கு இராணுவக் கட்டமைப்பு மற்றும் கட்டளைப் பீடங்களில் மேலும் மாற்றங்களைச் செய்வது குறித்து புதிய தளபதி பரிசீலனை செய்துவருவதாக உயர் வட்டாரங்களை மேற்கோள் காட்டி அப்பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது. (உ-எ)

### உள்ளூராட்சி தேர்தல்கள்

## ஆளும் கட்சியின் சார்பில் போட்டியிடுமாறு பலவந்தம்

கொழும்பு, ஜன. 12

வவுனியாவிலும், கிழக்கிலும் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களில் ஐ.தே.க வின் சார்பில் போட்டியிடுமாறு பலர் பலவந்தப்படுத்தப்பட்டிருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. திரு. ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்திருக்கிறார்.

இதற்காக பலர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் — அது குறித்து தாம் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் முறைப்பாடு செய்திருப்பதாகவும் அவர் சொன்னார்.

தற்போதைய நிலையில் வடக்கு—கிழக்கில் சுதந்திரமாகவும் நியாயமாகவும் தேர்தல்களை நடத்த முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதே வேளை—

வவுனியா நகரசபைக்கும் மற்றும் கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கும் நடத்தப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கும் தேர்தல்களுக்கு நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்கான கால எல்லை இன்று நண்பகல் 12 மணியுடன் முடிவடைகிறது. (உ-3-6)

## செல்லச்சாமிக்கு அதிரடிப் படை பாதுகாப்பு

கொழும்பு, ஜன 12

ராஜாங்க அமைச்சரும் இ.தொ.கா. பொதுச் செயலாளருமான திரு.எம் எஸ். செல்லச்சாமிக்கு விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பு வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது. (உ-எ)

## சமாதான பேச்சுக்களை நடத்த அரசாங்கம் முன்வர வேண்டும்

### எதிரணி எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஜன. 12

அர்த்தமில்லாத யுத்தத்தினை உடன் நிறுத்தி, சமாதானப் பேச்சுக்களின் மூலம் இனப்பிரச்சினையை தீர்க்க அரசு முன்வர வேண்டும்.

எதிரணியைச் சேர்ந்தவரும் கேகாலை நாடாளுமன்ற உறுப்பினருமான அத்தாவுட செனவிரத்தின ஸ்ரீலங்கா அரசை இவ்வாறு கேட்டுள்ளார்.

பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

வடக்கு-கிழக்கு பகுதிகளில் அரசு விடுதலைப் புலிகளுடன் அர்த்தமற்ற யுத்தத்தை நடத்தி வருகிறது. ஐ.தே.க. ஆட்சிக்கு வந்த பின்னரே இத்தகைய நிலை ஏற்பட்டுள்ளது.

இதானால் இளைய சமுதாயம் அழிக்கப்பட்டு வருவதுடன் [illegible] பொருளாதாரமும் அழிந்து போகிறது.

இதுவரை யுத்தத்துக்காக பெருமளவு பணத்தை அரசு செலவிட்டு வந்துள்ளது. இதனால் அபிவிருத்திக்கான நிதி குறைந்துள்ளதுடன், பெருமளவு அபிவிருத்தி திட்டங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போது மக்கள் எல்லோரும் சமாதானத்தையே விரும்புகிறார்கள். இதனால் தற்போதைய யுத்தத்தை நிறுத்தி அரசு விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை [illegible] முன்வரவேண்டும்" — என்றார். [ஒ-3)

## ஐ.தே.க- செல்லச்சாமி அணி கூட்டங்கள் நடத்த முடிவு

### முதல் கூட்டம் மாத்தளையில்

கொழும்பு, ஜன 12

இ.தொ.காவில் செல்லச்சாமியின் தலைமையிலான அதிருப்தியாளர்களும் ஐக்கிய தேசியக்கட்சியும் இணைந்து மத்திய மாகாணத்தில் பொதுக் கூட்டங்களை நடத்த முடிவு செய்துள்ளதாகவும்—

முதலாவது கூட்டம் மாத்தளையில் இம்மாதம் 27 ஆம் திகதி நடத்தத்திட்டமிடப்பட்டிருப்பதாகவும் சண்டே ரைம்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஹற்றன் நகரிலும் மற்றும் இடங்களிலும் கூட்டங்களை நடத்தவும் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இ.தொ.காவில் நிலவும் தற்போதைய நெருக்கடி செல்லச்சாமியின் அபிப்பிராயத்தை மக்களிடம் தெரிவிக்க இக் கூட்டங்கள் பயன்படுத்தப்படவிருக்கின்றனவாம். (ஒ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையில் உள்ள மேசைகளும், கடைத் தளபாடங்களும், கதவுகளும் விற்பனைக்கு உண்டு இல. 248, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (28887)

### WANTED

I.B.M. P.C. or I.B.M. Compatible Computer is wanted forSt. John's Church. those who are interested Please contact the Vicar, St. Jhon's Church, Chundikuli. (28880)

### விற்பனையாகின்றது

O M O S English Grammar, A/L Past Papers 1993 சேர்ந்தது, விஞ்ஞானம் 9ஆம் ஆண்டு, ஆழ்கூற்று கேத்திர கணிதம், மீட்டல் கணிதம்- O/L ஆகிய விற்பனையாகின்றன. ஸ்ரீலங்கா புத்தக சாலை யாழ். (சி-7013)

### உலக உலா

தென்மராட்சி மக்களுக்கோர் நற்செய்தி. உங்களுக்குத் தேவையான உலக உலா சஞ்சிகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்: சோதி புத்தகசாலை, கச்சாய் வீதி, (மக்கள் கடை அருகில்) சாவகச்சேரி. (சி-6921)

### கோழிக்குஞ்சு விற்பனை

Prima Lohman Brown இரண்டு மாத வயது உடன் விற்பனைக்குண்டு. இல. 29, மோகனகாந்தன் வீதி, சுவாட்ஸ் லேன், கச்சேரியடி (ஆசீர்வாதம் அச்சகம் முன் பாக). (28871)

### மணமகன் தேவை

இந்து டாக்டர், 35 வயது, சதயம் 3 ஆம் பாதம், 8இல் செவ்வாய், ஆட்சி பெற்ற கிரகபாவம் தகுந்த மணமகன் தேவை. வயது 33, கிரகபாவம் குறைந்த பரணி 3 ஆம் பாதம் உள்ளூரில் தொழில் புரியும் மணமகன் தேவை. கடிதத் தொடர்பு; இல. 589, மே/பா உதயன். (28877)

### லயன்ஸ் பிரசுரம்

சண்டிலிப்பாய், ஜன. 12 வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் "பிள்ளைகளின் உணவும் வளர்ச்சியும்" என்ற இலவசப் பிரசுரம் ஒன்ற வெளியிட்டுள்ளது.

கழகத்தின் தலைவர் திரு. ஆர். ரி. இராமச்சந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற விசேட பொதுக் கூட்டத்தில் இந்தப் பிரசுரத்தின் வெளியீட்டு வைபமும் இடம்பெற்றது. (ஒ-135)

### அன்பளிப்பு

வலிகாமம்தெற்கு, ஜன. 12 உடுவில் கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தினர் இப்பகுதியில் உள்ள பெற்றோரை இழந்த 15 பாடசாலை மாணவர்களுக்கு அவர்களின் கல்விக்கான உபகரணங்களை அன்பளிப்பாக வழங்க உள்ளனர்.

ஒரு ஆண்டில் நான்கு கட்டங்களாக வழங்கப்படும் இந்த அன்பளிப்பில் ஒரு கட்டத்தில் ஒரு பிள்ளைக்கு 1750 ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது (க-152)


வெளிவந்துவிட்டது!

மாற்றம்

ஆண்டு மலர்

(28895)



தேவை

நல்ல நிலையிலுள்ள Computers (கணனிகள்) தேவை.

தொடர்பு:-

NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, St Peters Lane, JAFFNA.

(சி/7024)



# PATRICIAN INSTITUTES

# பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனம்

தொழில் நுட்ப பயிற்சி நெறிகள் புதிய பிரிவுகள் 17 - 01 - 1994 திங்கட்கிழமை அன்று ஆரம்பமாகின்றன.

## 1 COMPUTER PROCESSING COURSES

(A) Children's Computers Studies

TALKING LESSON

Talking lesson one is an electronic teaching aid, combining traditional teaching methods with computer technology. Talking lesson one uses Special audio/visual features like a verbal tutor, musical sound effects and L. E. D. display screen to teach spelling, math, logic aud music. Talking lesson one also serves as a first introduction to using computer.

★ Introduction to Computers
★ Disk Operating System (DOS)
★ Introduction to Programming

DURATION: 2 Months

(B) Beginner's Computer Studies

★ Introduction to Computers
★ Disk Operating System (DOS)
★ Introduction to Programming
★ Programming in BASIC Language

DURATION: 4 Months

(C) Advanced Computer Studies

★ Disk Operating System (DOS)
★ Introduction to Programming
★ Programming in BASIC Language
★ Word Processing ★ Advanced BASIC

DURATION: 6Months

## 1 DIPLOMA IN COMPUTER STUDIES

★ Disk Operating System (DOS)
★ Introduction to Programming
★ Programming in BASIC Language
★ Word Processing
★ System Analysis and Design ★ Lotus 1-2-3
★ Introduction to Popular PC Sott ware

DURATION: 9 Months

● Lectures By: S. R. LOGENDRA D. C. A. (Systems Analyst) (M. C. S.)

● Equipment Used: LASER XT/2, LASER XT/3 386 and Bitcom - Computers (IBM Compatibles) (THEORY & PRACTICALS)

## 2 CIVIL DRAUGHTSMANSHIP AND QUANTITY SURVEYING

COURSE COVERS:

★ Draughtsman Ship
★ Engineering Drawing
(1) Geometrical Drawing
(2) Mechanical Drawing
(3) Machine Drawlng
★ Civil Engineering Material
★ Estimating
★ Fundamentals of Electricity
★ Builders Quantity
★ Building Constructions
★ Theory & Practical Drawing
★ House Plans Single & Double Storcy Buildings
★ Measurements of Buildings Works, Electrical
★ Project

QUALIFICATION: G.C.E. (O/L)) DURATION: 6 Months

## 3 CITY AND GUILDS OF LONDON EXAMINATIONS YEAR (94/95)

★ Quantity Surveying (Part I)

★ ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

QUALIFICATION; G.C.E. (O/L) DURATION: 6 Months

## 4 SPECIAL ENGLISH CLASSES

இலக்கணத்துடன் க. பொ. த. (சா/த) மற்றும் சகல விதமான பரீட்சைகளுக்கும் ஏற்ற வகையில் மிகக் குறுகிய காலப் பயிற்சி நடைபெறும்.

DURATION; 4 Months

## 5 SPOKEN ENGLISH

சிறந்த முறையில் ஆங்கில அறிவைப் பெறுவதற்கும் நன்றாக ஆங்கிலம் பேசுவதற்கும் ஏற்ற வகையில் குறுகியகால பயிற்சி வகுப்புகள் நடைபெறும்.

DURATION: 3 Months

## 6 TOEFL (Test of English as a Foreign Language)

★ பரீட்சைக்கு ஏற்ற வகையில் பயிற்சிகள் வழங்கப்படும்.
★ பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

DURATION: 4 Months

## 7 SHORT - HAND AND TYPING (English)

சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (ஆங்கிலம்)

★ நீண்டகால பாடத்திட்டம் ★ குறுகிய காலப் பாடத்திட்டம் என்ற வகையில் பயிற்சி நெறிகள் நடைபெறும்.

## 8 MOTOR MECHANISM

மோட்டார் வாகனம் திருத்துதல்

● இதில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடத்திட்டங்கள்

(Motor Cycle, Water Pump, Generator, Car, Lorry Engines)

(மோட்டார் சைக்கிள்கள், நீர் இறைக்கும் பம்பிகள், ஜெனரேற்றர், கார், லொறி எஞ்சின்கள்)

(பெற்றோல், டீசல், இயந்திரங்கள் யாவும்)

★ Petrol Engine — Ignition System, Operation maintenance and Care, Engine Overhaul and time Setttng (Ignition System — Contact Braker and Electronic Systems)

★ Diesel Engine — (Fuel injector System, design and Operational details)

(Clutch, Brake, Steering, Supension, Design and Operation)

அத்துடன் மோட்டார் வாகனங்களின் மின்சார உபகரணங்களைத் திருத்துதலும், மின்னேற்றலும் மின்சார இணைப்பும்

(Motor Vehicle Electrical Epuipment Repairing, Wiring System and Charging Systems)

Lecturs By: MR. A. S. GUNASEELAN (Automobile Engineer)

DURATION; 6 Months

## 9. ELECTRICAL WIRING - மின்சார இணைப்பு

● இதில் உள்ளடக்கப்பட்ட பாடங்கள்:

★ House Wiring — வீட்டு மின்சார இணைப்பு
★ Industrial Wiring — தொழிற்சாலை மின்சார இணைப்பு (Single Phase & Three Phase)

DURATION: 3 Months

## 10 MOTOR REWINDING - மோட்டர் ரீவைண்டிங்

★ Fundamentals of Electricity
★ Transformers
★ Single Phase Motor and Fans
★ Magnet
★ Armatures
★ Three Phase

DURATION: 4 Months

## 11. GENERAL ELECTRICIAN - ஜெனரல் எலக்ரீஸியன்

● இதில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடத்திட்டங்கள்:

★ Fundamentals of Electricity (DC Theory, Networks & AC Theory, Networks)
★ Basic ELECTRONICS
★ Electro Magnetism & Coils
★ Direct Current Machines (Dynamo & Motors Starters
★ Alternating Current Machines (Generator, Motor, Transformer)
★ Domestic Electrical Circuits (Wiring & Automatic Controls)
★ Eloctrical Circuits of Vehicle
★ Three Phase (Electrial Lines, Motors & Generators)
★ Electrical Circuits & Repairing of Aircondition & Refrigeration

DURATION; 6 Months

குறிப்புகள்;

★ அனைத்துப் பயிற்சிகளும் வாரநாள், வார இறுதி நாள் வகுப்புகளாக நடைபெறும்.
★ அனைத்துப் பயிற்சி நெறிகளின் முடிவில் விளக்கப் பயிற்சி பரிட்சைகளும், செய்முறைப் பரிட்சைகளும் நடத்தப்பட்டு சித்திபடைவோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.
★ அனைத்துப் பாடங்களுக்கும் தரமான விளக்கப் பயிற்சிகளும் தேவையான பயிற்சிகளுக்கு போதிய செய்முறைப் பயிற்சிகளும் வழங்கப்படும்.
★ விண்ணப்பப் படிவங்களையும், பாடநெறிகளுக்கான கட்டணங்கள் மற்றும் பாடத்திட்டங்களையும் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு

பதிவாளர்
பற்றீஷன் உயர்கல்வி,
நிறுவனம்.
59, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

REGISTRAR
Patrician Institute of Higher Studies.
59, St. Patrick's Road, Jaffna.

## வாகன தகுதிச் சான்றிதழ் - 1994

FITNESS CERTIFICATE FOR MOTOR VEHICLE — 1994

1994 ஆம் ஆண்டுக்கான மோட்டார் வாகனத் தகுதிச் சான்றிதழ் திரு. A. S. குணசீலன் (Automobile Engineer) Certifying Officer for Motor Vehicle Fitness) அவர்களால் எமது ஸ்தாபனத்தில் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

REGISTRAR

PATRICIAN INDUSTRIAL INSTITUTE

59, ST. PATRICK'S ROAD, JAFFNA

(C-6947)



# தசாக கிரகயக்ஞ அழைப்பு

04-01-94 செவ்வாயன்று இறைபதம் அடைந்த கோப்பாய் வடக்து கா. செல்வந்திநாத ஐயரின் கனிஷ்ட புத்திரனும் எனது சகோதரனுமாகிய,

## பிரம்மஸ்ரீ செ. குமாரசாமி சர்மா

அவர்களின்

தசாகம்:- 13-01-94 வியாழக்கிழமை பகல் 10-00 மணிக்கும்
கிரகயக்ஞம்:- 16-01-94 ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும்.

அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி!

இங்ஙனம்:
செ. பரமானந்தக் குருக்களும், தாயாரும்.

1ஆம் கட்டையடி,
கல்வயல் வீதி,
சாவகச்சேரி.

(28861)



# வித்துவான் சி. குமாரசாமி இரங்கற் கூட்டம்

எமது முன்னாள் விரிவுரையாளரும் மூத்த தமிழறிஞருமான வித்துவான் சி. குமாரசாமி அவர்கள் கொழும்பில் காலமாகி விட்டார். அன்னாருக்கு எமது கலாசாலை எடுக்கும் இரங்கற் கூட்டம் 12—01—1994 புதன்கிழமை பகல் 1.00 மணியளவில் கலாசாலை மண்டபத்தில் இடம்பெறும். பழைய மாணவர்களையும், விரிவுரையாளர்களையும், உறவினர்களையும், நண்பர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இங்ஙனம்
அதிபர், உபஅதிபர்,
விரிவுரையாளர்கள்.

ஆசிரிய கலாசாலை,
கோப்பாய்.

(28900)



# விக்னா

கல்வி நிறுவனம்

பொருளியல்

திரு. கலாகரன்

93 பரீட்சையில் தோன்றியவர்களுக்கு

மீட்டல்

94 DAY CLASSES

TUE, THU, FRI.
(8-00 — 10-00)
(10-00 — 12-00)

94 Sat, Sun.
(11-00 — 12-30)

95 Sat, Sun.
(12-30 — 2-00)

★ ஒவ்வொர் பாட அலகும் கடந்த கால வினா விடைகளுடன் செய்யப்படும். (சி-7028)



# விக்னா

கல்வி நிறுவனம்

கணக்கியல்

திரு. S K. பிரபாகரன்

93 பரீட்சையில் தோற்றியவர்களுக்கு

மீட்டல்

A/L 94 Day Classes

Mon. Tue. Thu.
8.00 — 10.00
10.00 — 12.00

A/L Sat., Sun.
1.30 — 3.00

A/L 95 Sat, Sun.
12.00 — 1.30

★ ஒவ்வோர் பாட அலகும் கடந்தகால வினா விடைகளுடன் செய்யப்படும்.

(சி/7026)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

192/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.


## செல்லச்சாமிக்கு அமைச்சர் பதவி

அமைச்சரவையில் அடுத்த மாதத்தில் சில மாற்றங்கள் செய்யப்படலாம் என அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகிறது.

அப்போது—

தற்சமயம் ராஜாங்க அமைச்சர் பதவியில் இருக்கும் எம். எஸ். செல்லச்சாமிக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவி வழங்கப்படும் என ஊகம் தெரிவிக்கப்படுகிறது.

தங்களது கட்சிக்கு அரசியல் லாபம் கிட்டும் வகையில் ஏனைய கட்சிகளில் இருப்போர் அரசியல் குத்துக்கரணங்கள் அடித்தால், அவர்களுக்கு உடனே அமைச்சர் பதவி வழங்குவது ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் ஒரு பாரம்பரியமாகும்.

1977இல் ஆட்சிக்கு வந்து கடந்த 16 ஆண்டுகளுக்கு மேல் அரசுக் கட்டிலில் இருந்து வரும் ஐ. தே. க. அரசுகளின் தலைவர்களுக்கு, அரசியல் குத்துக்கரணங்களுக்கு அமைச்சர் பதவி என்ற பரிசை வழங்குவது ஒரு கைவந்த கலை.

செல்லையா இராஜதுரையில் இருந்து அனுரா பண்டாரநாயக்கா வரை இப்படித்தான் அமைச்சர் பதவிக்கு வந்தார்கள்.

மத்திய மாகாணசபையில் ஆட்சியில் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அரசை, நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போது காப்பாற்றுவதற்காக — தனது கட்சியைச் சேர்ந்த ஏழு மாகாணசபை உறுப்பினர்களின் கடத்தலுக்கு உடந்தையாக இருந்து வாக்கெடுப்பு நடவாமல் தடுத்தவர் செல்லச்சாமி.

கட்சியின் மூத்த தலைவரான தொண்டமானுக்கே எதிராக கட்சிக்குள் ஓர் அணியைத் திரட்டி செயற்பட வைத்ததன் மூலம் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க மீது தமக்கிருந்த பக்தியை வெளிப்படுத்தியவர் அவர்.

அதற்குப் பரிசாக அவருக்கு அமைச்சர் பதவி கிட்டவிருக்கிறது.

ஆனால் —

நாடாளுமன்ற, மாகாண சபை ஆசனங்களைக் கணக்கு வைத்து அதற்காக அமைச்சர் பதவிகளை வழங்குவது அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்கப்போவதில்லை என்பதை ஏனோ ஆட்சியாளர்கள் புரிந்து கொள்வதாக இல்லை.

உரிமைகேட்டு தமிழ் மக்கள் கிளர்ந்து எழுந்தபோதும், இப்படித்தான் நாய்க்கு எலும்புத் துண்டுகளைப் போடுவது போல சில தமிழர்களுக்கு அப்போதைய அரசுகள் அமைச்சர் பதவிகளைக் கொடுத்தன; தற்போதைய அரசும் கொடுத்துள்ளது.

ஆனால் அவை, கிளர்ந்தெழுந்த உரிமைப் போராட்டத்தை சமாளிக்கும் பரிகாரமாக அமைந்து விடவில்லை.

ஈழத் தமிழரிடம் பலிக்காத இந்த முறையை இப்போது மலையகத் தமிழரிடம் அவிழ்த்து விட்டுப் பார்க்கிறது அரசு.

மலையகத் தமிழர்களும் தங்கள் உரிமைகளுக்காக குரல் கொடுக்கத் தொடங்கி விட்டார்கள். அதைப் புரிந்து கொண்ட தொண்டமான் தான் முந்திக் கொண்டு தனது மக்களுக்காக — தனது மக்களின் உரிமைக்காக — அரசுடன் போர் தொடுக்கத் தயாராகி விட்டார்.

நிலைமையை உணர்ந்த அரசும் தொண்டமானை வழுக்கி விழச் செய்து — இ. தொ. காவை பிளந்து — உரிமை கேட்டு எழும் குரலை அடக்கி விட எத்தனிக்கிறது.

அந்த நாடகத்தின் ஒரு கட்டம் தான் செல்லச்சாமிக்கு அமைச்சர் பதவி.

குதிரைக்கு முன்னால் கரட் கிழங்கைக் காட்டி குதிரையை ஓட விடுவது போல் செல்லச்சாமிக்கு முன்னால் அமைச்சர் பதவி என்ற கரட் காட்டப்பட்டிருக்கிறது.

ஆனால் —

தொண்டமானை தனிமைப்படுத்துவதாலோ அல்லது செல்லச்சாமிக்கு அமைச்சர் பதவி வழங்குவதாலோ அல்லது இ. தொ. காவைப் பிளப்பதாலோ மலையக மக்களின் உரிமைக் குரலை அடக்கிவிட முடியாது.

ஈழத் தமிழரிடம் சுற்ற இதே பாடத்தை மலையக மக்களிடமும் அரசு படிக்கப் போகிறது என்பதுதான் உண்மை.

# 60 ஆயிரம் ஆப்கன் அகதிகள் பாகிஸ்தானுக்குள் தஞ்சம்!

## ஜனாதிபதி மாளிகை மீது விமானத்தாக்கு

ஜெனிவா, ஜன. 12

ஆப்கனிஸ்தானில் புதிதாக ஆரம்பித்துள்ள சண்டையைத் தொடர்ந்து தலைநகர் காபூல் மற்றும் அதன் சுற்றுப் புறங்களில் இருந்து சுமார் 60 ஆயிரம் பேர் அகதிகளாக பாகிஸ்தான் சென்றுள்ளனர் என்று ஐ. நா. பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இதனிடையில்— காபூலில் உள்ள ஜனாதிபதி மாளிகை மற்றும் முக்கிய அரச கட்டடங்கள் ஜெனரல் துஸ்தம் தலைமையிலான கிளர்ச்சிப் படையினரின் விமானத் தாக்குதலுக்கு இலக்கானதாக அறிவிக்கப்படுகிறது.

ஜெனரல் துஸ்தம் படைகளுடன் பிரதமர் ஹெக்மதியாருக்கு ஆதரவான படைகளும் இணைந்து ஜனாதிபதி ரப்னிக்கு விசுவாசமான படைகளுக்கு எதிராக சண்டையிட்டு வருகின்றன.

கிளர்ச்சிப் படைகள் ஜெட் போர் விமானங்களைப் பயன்படுத்தி ஜனாதிபதி மாளிகை மற்றும் அரசகட்டடங்களைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது. (இ-எ)

## காஞ்சி முனிவர் நினைவுப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு நடத்தும் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் நினைவுப் பிரார்த்தனை இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும். (க)

## தொற்று நோய் அதிகரிப்பு

மந்திகை, ஜன. 13

கடந்த இரண்டு மாதங்களாக வடமராட்சியில் மலேரியா, முளைக் காய்ச்சல், நெருப்புக் காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. (க)

## வழிகாட்டல் வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ். பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கான வழிகாட்டல் வகுப்புகள் இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து கலைப்பீடத்தில் நடைபெற்று வருகின்றன.

நாளை 13ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள வழிகாட்டல் வகுப்புகள் கலை, வர்த்தக முதலாம், இரண்டாம், மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு உதவும் பொருட்டு அவ்வத்துறைசார் விரிவுரையாளர்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

## பல்லாயிரம் பேரை புதைத்த ஸ்ராலின் கால புதைகுழி

### லித்துஏனியாவில் கண்டுபிடிப்பு

வில்னியஸ், ஜன. 12

சர்வாதிகாரி ஸ்ராலினின் ஆட்சியின் கீழ் அரச படைகளால் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கானோரைப் புதைத்த பாரிய புதைகுழி ஒன்று லித்துஏனியா நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தலைநகர் வில்னியஸில் கண்டு பிடிக்கப்பட்ட புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளை அடையாளங் காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1944 – 1947 க்கு இடைப்பட்ட காலத்தில் கொல்லப்பட்டவர்களே இப்புதைகுழியில் புதைக்கப்பட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

## திருமலை நகரில் 15 தமிழர்கள் கைது

திருகோணமலையில் பொலீஸாரும், இராணுவத்தினரும் கூட்டாக நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதலின் போது பதினைந்து தமிழர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிளான்டன் பொயின்ற் மற்றும் உள்துறைமுக வீதி ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக இச்சுற்றி வளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டதாகவும் —

அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் அனைவரும் கல்யாண மண்டபத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகவும் —

வயோதிபர்களும் தொழிலாளர்களுமாக பதினைந்து பேர் பின்னர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## பிரபஞ்ச மர்மம் துலக்கம் தெளிவான படங்கள்!

### ஹபிள் கலம் அனுப்ப ஆரம்பம்

வாஷிங்டன், ஜன. 12

பிரபஞ்சத்தின் மர்மத்தை வெளிப்படுத்தும் தெளிவான படங்களை அண்ட வெளியில் வலம்வந்து கொண்டிருக்கும் ஹபிள் கலத்தின் தொலைநோக்கி அனுப்ப ஆரம்பித்திருப்பதாக அமெரிக்க வானவியலாளர்கள் அறிவித்துள்ளனர்.

ஹபிள் தொலைநோக்கி அதிசக்திவாய்ந்தது. அது பழுதடைந்திருந்ததால் எதிர்பார்க்கப்பட்டபடி விஞ்ஞானிகளால் பிரபஞ்சம் பற்றிய தெளிவான படங்களை முன்னர் பெறமுடியாதிருந்தது.

பழுதடைந்த தொலைநோக்கியை திருத்துவதற்காக நாஸா விண்வெளி நிலையம் 'என்டவர்' விண்கலத்தில் ஆறு விண்வெளி விஞ்ஞானிகளை கடந்த டிசம்பர் மாதத்தில் அண்டவெளிக்கு அனுப்பி வைத்தது. இவ்விஞ்ஞானிகள் அண்டவெளியில் ஐந்து தடவைகளில் 6 மணித்தியாலங்கள் நடந்து சென்று, வலம்வந்துகொண்டிருந்த ஹபிள்கலத்தில் உள்ள தொலைநோக்கியைத் திருத்தினார்கள். சிக்கல் நிறைந்த இத்திருத்த வேலையை மேற்கொண்ட 'என்டவர்' பயணத்துக்கு நாஸா 100 கோடி டொலர் பணத்தைச் செலவழித்தது.

இதன் பின்னரே ஹபிள் தொலை நோக்கி பிரபஞ்சம் பற்றிய இதுவரை கண்டிராத — தெரிந்திராத தகவல்களைக் கொண்ட தெளிவான படங்களை அனுப்ப ஆரம்பித்திருப்பதாக நாஸா விஞ்ஞானிகள் மகிழ்ச்சி பொங்க நேற்றுத் தெரிவித்தனர்.

ஹபிள் விண்கலம் இனி திட்டமிட்டபடி பிரபஞ்சத்தின் மர்மம் பற்றிய தகவல்களை தொடர்ந்து வருங்காலத்தில் அனுப்பிவரும் என்றும் நாஸா விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

பத்தாண்டுகளுக்கு ஹபிள் கலம் அண்டவெளியில் பயணத்தை மேற்கொள்ளக்கூடியதாகத் திட்டமிடப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது என்றும் நாஸா அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-எ)

## 4,500 பேருக்கு மகாபொல பரிசில்

கொழும்பு, ஜன. 12

இவ்வாண்டில் 4 ஆயிரத்து 500 பேருக்கு மகாபொல உயர்கல்விப் புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

பல்கலைக்கழக உயர்கல்வி பெறுவோருக்காக வழங்கப்படும் 3 700 புலமைப் பரிசில்களும் இவற்றில் அடங்கும்.

மிகுதியாக உள்ளவை இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகள், திறந்த பல்கலைக் கழகம் ஆகியவற்றின் மாணவருக்கு வழங்கப்படும்.

## தொடர்பு சாதனங்களுக்கு இராணுவ இரகசியங்கள் வெளியிடப்படக்கூடாது

### புதிய தளபதி ஜெரி உத்தரவு

கொழும்பு, ஜன. 12

இராணுவ இரகசியங்கள் பொதுசன தொடர்பு சாதனங்களுக்கு வெளியிடப்படக் கூடாது.

புதிய தளபதி ஜெரிடிசில்வா இவ்வாறு இராணுவத்தினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

முறையாக அமைக்கப்பட்ட வழிகள் மூலமே பொதுசனத் தொடர்பு சாதனங்களுக்குத் தகவல்கள் பரிமாறப் படவேண்டும் என்று கூறிய புதிய தளபதி அதற்கான விதிமுறைகள் பின்பற்றப்படவேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

## இசை, நடன, சித்திர ஆசிரியர் வெற்றிடம்

கொழும்பு, ஜன. 12

கிழைத்தேச இசை, நடன ஆசிரியர்களும், சித்திர ஆசிரியர்களும் நியமிக்கப்படவுள்ளனர்.

கல்விச் சேவைகள் சபை தகுதி வாய்ந்தவர்களிடம் இருந்து இதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் பாடசாலைகளில் இவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் இந்த ஆசிரியர்கள் மத்திய அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நியமிக்கப்படுவார்கள்.

விண்ணப்பதாரர்கள் இம்மாதம் 24ஆம் திகதி அன்று 18 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 40 வயதுக்கு மேற்படாதவர்களாவும் இருக்க வேண்டும்.

தகுதியுள்ள ஆண்களும், பெண்களும் ''செயலாளர், கல்விச் சேவைகள் சபை, இசுருபாய, பெலவத்தை, பத்தரமுல்ல'' — என்ற விலாசத்துக்கு இம்மாதம் 24ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

சிங்கள மொழி மூலமான ஆசிரியர்களுக்கு மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய எல்லா மாவட்டங்களிலும் வெற்றிடங்கள் உள்ளன.

தமிழ்மொழி ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் சகல மாவட்டங்களிலும் உண்டு.

பதவி வெற்றிடங்கள் உள்ள மாவட்டங்களில் நிரந்தரமாக வசிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இது சம்பந்தமான விவரங்கள் கடந்த ஆண்டு டிசம்பரில் வெளியான அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. (இ-எ)

## சங்கானை சிவப்பிரகாச ம. வியில் இடநெருக்கடி

சங்கனை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் மாணவர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் வகுப்புகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் இவ்வாண்டு ஆறாம் ஆண்டுகளுக்கு புதிதாக மாணவர் அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது சங்கானை கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்திலும் சில வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

இதேவேளை, இப்பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறையும் நிலவுகிறது.

1636 மாணவர் கற்கும் இப்பாடசாலையில் 53 ஆசிரியர்களே உள்ளனர். பத்து ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாதிருக்கின்றன. (க-135)

## 60 பேருக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ். செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் பணியாற்றிய 60 எழுதுவினைஞர்கள் சேவை நிரந்தரம் பெற்றுள்ளனர்.

யாழ் அரச அதிபரால் யாழ். மாவட்டத்தில் நடத்தப்பட்ட [போட்டிப் பரீட்சையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 199பேர் மாகாண சபையின் கீழ் உள்ள திணைக்களங்களில் கடந்த ஒரு வருடமாக தற்காலிகமாக பணியாற்றி வருகிறார்கள்.

இவர்களில் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் 60 எழுதுவினைஞர்களே நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர். இதற்கான கடிதங்கள் மாகாண சபையால் யாழ். அரச அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அவை பதிவுத்தபால் மூலம் உரியவர்களுக்கு கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஏனைய திணைக்களங்களில் பணியாற்றுபவர்களின் நிரந்தர நியமனம் குறித்து, அந்த அந்த திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யாழ். அரச அதிபர் அந்த அந்த திணைக்களத் தலைவர்களை கேட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆளும் கட்சி---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் தொடர்பு கொண்டார்.

கொட்டகலையில் இருந்து தொண்டமான் கடந்த ஞாயிறு கொழும்பு திரும்பி தமது சட்டத்தரணிகளுடன் ஆலோசனை நடத்தத் திட்டமிட்டிருந்தார்.

இதனிடையில் —

மத்திய மாகாண சபையில் அமைச்சராக இருந்த எஸ். சதாசிவம் அகற்றப்பட்டு, அவரின் இடத்துக்கு செல்லச்சாமிக்கு விசுவாசமான ஏ.கதிரேசன் என்பவர் நியமிக்கப்பட்டார்.

சதாசிவம் தொண்டமானின் ஆதரவாளர் ஆவார்.

இது குறித்து தொண்டமான் ஐ.தே.க பொதுச் செயலாளர் சிறிசேன கூரேக்கு எழுதிய கடிதம் ஒன்றில் —

இந்த நிலைவரைத்தை மாற்ற நடவடிக்கை எடுக்காவிடில் ஐக்கிய தேசியக் கட்சியுடனான உறவில் வெடிப்பு ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ளார். (உ-எ)

### கொழும்பு---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா விடுத்தார்.

மேற்படி குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரிக்க ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. எ எஸ். எம். செனிவிரத்னாவை ஆணையாளராகக் கொண்ட ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

புதிய மேயராகப் பொறுப்பேற்றுள்ள திரு. கணேசலிங்கம் ஐ.தே.கவின் பொருளாளர் என்பது தெரிந்ததே. (உ-3-6)


## பதவி வெற்றிடம்

பாலர் பாடசாலை ஆசிரியைகள் தேவை

விண்ணப்ப படிவம் மற்றும் கல்விச் சான்றிதழ்களுடன் எதிர்வரும் 15—01—1994 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நேர்முகப் பரீட்டைக்கு சமுகமளிக்கவும்.

கொழும்புத்துறை மேற்கு,
கிறிஸ்தவ நிலையம்.

(28902)



உரும்பராய்

## சிதம்பரசுப்பிரமணிய சுவாமி கோயில் மஹோற்சவ தினங்கள்

13 - 01 - 94 வியாழக்கிழமை முற்பகல் 11 மணி கொடியேற்றம்
22 - 01 - 94 சனிக்கிழமை பிற்பகல் மஞ்சம்
25 - 01 - 94 செவ்வாய்க்கிழமை பிற்பகல் சப்பறம்
26 - 01 - 94 புதன்கிழமை முற்பகல் 9 மணி தேர்
27 - 01 - 94 வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தீர்த்தம்
28 - 01 - 94 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி திருக்கல்யாணம்

★ ★ ★

கொடியேற்ற நாளில் இருந்து திருக்கல்யாண உற்சவம் வரை தினசரி மாலை 6.30 மணி தொடக்கம்

செஞ்சொற்சீராளன், யாழ். இந்து ஆசிரியர்

திரு. த. சிவகுமாரன் அவர்களின்

பெரியபுராண விரிவுரை

இடம்பெறும்

★ ★ ★

ஆலயத்தில் இடம்பெறும் சகல வைபவங்களிலும் பங்குபற்றி, வழிபாடு செய்து, சிதம்பர சுப்பிரமணிய சுவாமியின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம், அடியார்கள் அனைவரும் வேண்டப்படுகின்றார்கள். ★

பரிபாலனசபை.
சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில்,
உரும்பராய்.

[28901]



## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் யாழ். மாவட்டம்

சகல தனியார் கல்வி நிறுவனங்களுக்கும்

தனியார் கல்வி நிறுவன ஒழுங்கு விதிகள் அச்சிட்டு வழங்கப்படுகின்றன. செலுத்த வேண்டிய சந்தாப்பணம் நிலுவையுடன் ரூபா பத்தும் (10/-) செலுத்தி 17-01-1994 திங்கட்கிழமை முதல் கீழ்வரும் உங்கள் கோட்ட அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளவும்.

1) யாழ் கோட்டம்:
தனியார் கல்விப் பிரிவு,
இல. 19, செம்மணி வீதி, நல்லூர்.

2) மருதனார் மடம் கோட்டம்
வினைல்ஸ் கல்வி நிறுவனம்,
கன்னாகம்.

3) வடமராட்சிக் கோட்டம்:
புலோலி கல்வி நிலையம்,
உபய சதிர்காமம்.

4) பண்டத்தரிப்புக் கோட்டம்:
சுப்றா கல்வி நிலையம்,
சித்தன்கேணி.

5) தென்மாராட்சிக் கோட்டம்
பொருளாளர்

✲ முக்கிய குறிப்பு:

எதிர்வரும் 16 01-94 ஞாயிற்றுக்கிழமை சேணல் கிட்டு. லெப். சேணல் குட்டிச்சிறி உட்பட பத்து வேங்கைகளின் வீரச்சாவின் ஓராண்டு நினைவையொட்டி சகல தனியார் கல்வி நிறுவனங்களும் வகுப்புகளை ரத்துச் செய்து அன்றைய நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

பொதுச் செயலாளர்
யாழ். மாவட்டம்

(சி-6953)



## கம்பியூட்டர் வகுப்புக்கள்

C. S. A.

புதிய வகுப்புகள் ஆரம்பம்

4 மாத BASIC PROGRAMMING
15 — 01 — 1994 சனி காலை 8-30 மணி

7 மாத DIPLOMA IN COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING
18 — 01 — 1994 செவ்வாய் காலை 8-30 மணி

விரிவான கம்பியூட்டர் அடிப்படை அறிவுடன் சிறந்த Programmer ஆக விரும்பினால .....

பல்கலைக்கழகத்தில் கணனி விஞ்ஞானம் படிக்க விரும்பினால .....

நீங்கள் நாடவேண்டிய இடம்:

COMPUTER SCIENCE ACADEMY,
NAVALADY LANE,
THIRUNELVELY NORTH.

வசதி குறைந்த, ஆர்வமுள்ள, தகுதியான மாணவர்கள் இலவசமாக (Scholarship) படிப்பதற்கு உடன் தொடர்பு கொள்ளவும். (28820)


வன முண்டானால்- நம்நாடு வளமாகிடுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தாண்டிலி... புத்தம் புது நிகழ்ச்சி

யாழ். ரமணனின்

ராஜன்ஸ் இசையில்

சாந்தன்

முதல் முறையாக இணைந்து பாட

ராஜன்ஸ் படைக்கும்

இன்னிசை

பொங்கல்

S. G. சாந்தனுடன், ஜெயா சுகுமார், பார்வதி சிவபாதம், வர்ணராமேஸ்வரன், S. திவாகர், S. சத்தியலேன், ஸ்ரவி சிவானந்தன், திருமலை சந்திரன், ஈழத்து மனோ நாவலன் ஆகியோரின் —

இசைச்சுவை

"சிற்றி போய்ஸ் டெய்வர்ஸ் ஆதரவில்"

தங்கவேல் செல்வராஜா குழுவினரின்

"சிரி சிந்தியுங்கள்"

நகைச்சுவை

மாஸ்டர் T. கஜேந்திரனின் ஓர்கன் இசை

இடம்: வேம்படி மகளிர் கல்லூரி

காலம்: 14 - 01 - 1994

நேரம்: பி. ப. 2-30. மாலை 7மணி

டிக்கெற்: 100/- 50/-

கிடைக்கும் இடம்:

மணிக்குரல் விளம்பர சேவை

★ வருடங்கள் யுகங்களானாலும், என்றென்றும் ரம்மியமான கலைப் படைப்புகளுக்கு

சிறி நதியா நகை மாளிகை

(மீண்டும், மீண்டும் செல்லத்தூண்டும் காண்போர் மயங்கும் காட்சிக் கூடம்)

சிறி நதியா நகை மாளிகை

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(28839)



யா/கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலயம்

அதிபர் திரு. மு. இராமலிங்கம்

அவர்களுக்கான

மணிவிழா

யா/கனகரத்தினம் ம. ம. வி. ஆசிரியர்கள் மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர் சங்கம் இணைந்து 30-01-1994 காலை 9-00மணிக்கு பாடசாலையில் நடத்தவுள்ள மணிவிழாவில் பங்கு கொள்ள விரும்பும் அன்பர்கள் பழைய மாணவர்சங்கப் பொருளாளர் திரு. ஏ. ஜெயக்குமார் (ஆசிரியர், யா/கனகரத்தினம் ம. ம, வி அவர்களுடன் 20-01-1994க்கு முன் தொடர்பு கொள்ளவும்.

-மணிவிழாக் குழு.

யா/கனகரத்தினம் ம, ம. வி.

(28893)



யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

க பொ. த. (உயர்தரம்)

1994 அனுமதி

க பொ த (சா, த) முன்னோடிப் பரீட்சை 1993, யில் தகுதி பெற்ற மாணவர்கள் விஞ்ஞானம், வர்த்தகம், கலை ஆகிய பிரிவுகளுக்கு 15-01-94இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

அதிபர்,

12-01-1994. யா/கனகரத்தினம் ம ம,வி.

(28892)



ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 02 10 1955

மறைவு: 09 01 1993

மு. சி. கந்தையா சண்முகநாதன் (சச்சி)

பத்து மாதம் சுமந்துன்னைப் பாலூட்டி, சீராட்டி வித்தகனாய் வளர்த்த உன் அன்னை மறப்பாளோ! மெத்த அன்புடன் கூடிக் களித்திருந்த உத்தமராம் உடன்பிறந்தோர் உன்னை மறப்பாரோ! இத்தாலி தனில் சென்று ஈராண்டாகியும் சொந்த ஊர் வரமுதலே சோதியுள் கலந்துவிட்டாய், உந்தன் புதுப்பொலிவை உடனிருந்து பார்க்குமுன் சொந்த பந்தம் விட்டு சுவர்க்கம் புகுந்தாயோ! சிந்தை கலங்குதையா சச்சி உன்னை நினைத்து, முந்தநாள் போல்நிக்க ஓராண்டு மறைந்ததையா!

திருமதி மு. சி. கந்தையா குடும்பத்தினர்.

தாவடிச் சந்தி,

தாவடி. (28874)



"உண்மையே உயர் அறம்"

யாழ்/சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி

1894 - நூற்றாண்டு விழா - 1994

பகையில்லாப் பண்பன், மனிதருள்ளும் தேவன் மறைந்த மருத்துவமணி, எமது கல்லூரியின் முன்னாள் முகாமையாளர்.

(1934 - 1960)

வைத்திய கலாநிதி

அமரர் சின்னத்தம்பி சுப்பிரமணியம்

(P. S) J P. U M.

அவர்களின்

30ஆவது நினைவுச் சொற்பொழிவு

இடம்: ஸ்கந்தவரோதயக் கல்லூரி

காலம்: 12 - 01 - 1994 புதன்கிழமை

நேரம்: காலை 10 00மணி

தலைவர்: திரு. ஆ கமலநாதன்

நினைவுரை: திரு. செ. குமாரசாமி

நாடளுமன்ற சமகால உரை பெயர்ப்பாளர்)

திரு. ஆ. சி, கணேசவேல் J. P.

(தபால் அதிபர், கந்தரோடை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

வைத்திய கலாநிதி,

தி. இராசேந்திரம்

ப. மா. ச உறுப்பினர்.

(சுன்னாகம்)

குறிப்பு:

1. முகாமையாளர் நினைவுக் கட்டுரைப் போட்டிகள் எமது கல்லூரி மாணவர்களுக்கு இடையே நடைபெற்று பரிசுகள் பின்னர் வழங்கப்படும்.
2. நூற்றாண்டை ஒட்டி முன்னோடிகளையும், தாபகரையும், இணைந்துழைத்தோரையும், பழைய மாணவர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்ச்சிகளையும் நினைவு தினங்களை நினைவு கூரும் சொற் பொழிவு நிகழ்ச்சிகளையும் நடத்த உள்ளோம்.
3. தயவு செய்து கல்லூரியுடன் தொடர்புடையவர்கள் இவ்விழாவினை நடத்த தங்களது ஆலோசனைகளையும், அபிப்பிராயங்களையும் உதவிகளையும் தந்துதவ முன்வர வேண்டும் என்று அன்பாக கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

சேது. வீபுலானந்தா செயலாளர் ப. மா. ச.

207, விப. ஒபிற் சேவிஸ், சுன்னாகம். கந்தரோடை, சுன்னாகம்.

(சி/6952)



2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் விரகத்தி சிவலிங்கம்

(உதவி அரசாங்க அதிபர், நானாட்டான்)

தோற்றம்: 17-01-1946

மறைவு: 06-01-1992

ஆண்டிரண்டு சென்றாலும் அன்பு முகம் மறக்க முடியவில்லை. அழியா நினைவலைகள் ஆட்டிப் படைக்கின்றதே. அன்போடு எம்மை அரவணைத்த அப்பா இனி என்று உம்முகம் காண்போம். பார்ப்பதற்கு பல திருக்க பாதியிலே விட்டுவிட்டு நாம் நினையா நாளிலே எமைவிட்டேன் மறைந்தனையோ. நீங்கள் இம் மண்ணகம் விட்டு விண்ணகம் சென்றாலும் எங்கள் நெஞ்சங்களில் இன்றும் வாழ்ந்து கொண்டே இருக்கின்றீர்கள். பார்தனிலே எம் வாழ்விற்காய் உங்களை உருமாக்கினீர்கள். எம் உயர்வு காணும் முன்னே இறைவன் தாள் சென்றடைந்த தேனோ? அப்பா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய நாங்கள் என்றும் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்.

"ராஜஸ்தான்",
கிழவி தோட்டம்,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(28898)


## இன்று

"மகவம்" அமைப்பின் 39 ஆவது சந்திப்பு நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு உரும்பராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் மகவம் தலைவர் வேல் அமுதனின் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் போது "கோலங்கள் ஐந்து" நாடக நூல் பற்றிய ஆய்வு இடம் பெறும். (க)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் வழங்கும் "பொய்க்கால்" என்னும் நாடகம் இன்று பருத்தித்துறைவடஇந்துமகளிர் கல்லூரில் நடைபெறும். நாளை வியாழக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இடம்பெறும். (அ)

★ ★ ★

அச்சுவேலி மகா வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் திரு. க. இராசதுரை தலைமையில் நடைபெறும்.

யாழ். வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. கே. கந்தசாமி பிரதம விருந்தினராகவும், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் திரு. இ. சிவானந்தன், திரு. கே. வீரபத்திரன் கோப்பாய் பிரதேச செயலர் திரு. கே. கேதீஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், கோப்பாய் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி T. தியாகராசா, மருதனார்மடம் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. செழியன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள். (க-155)

★ ★ ★

யாழ்ப்பாணம் தெற்கு வலய பாட சிறப்பு அலுவலர்கள், முதன்மை ஆசிரியர்கள் ஆகியோருக்கான கல்வி அபிவிருத்தி திட்டமிடல் அமர்வு இன்று புதன்கிழமை காலை 8. 30 மணி முதல் 4. 30 மணி வரை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும். (த)

★ ★ ★

சுவாமி விவேகானந்தர் தேசிய தின விழா இன்று மாலை 4 மணிக்கு உரும்பராய் சுபிட்ச நூல் நிலைய மண்டபத்தில் நடைபெறும். (த)


இசை வகுப்புகள்

ஓகன் மெலோடிக்கா

கிற்றார் றம்ஸ்

ஃபொங்கோறம் பொங்கஸ்

தபேலா

ஆகிய வாத்தியங்களில்

பிரபல இசைக்குழு கலைஞர்களால் நடத்தப்படும் வகுப்புகளில் இணைந்து உங்கள் இசைத்திறனை வெளிப்படுத்த

ஓர் அரிய சந்தர்ப்பம்

ஆரம்பம்: 14 - 01 - 1994

வெள்ளிக்கிழமை (பொங்கலன்று)

காலை 10-00மணி

சகல வகுப்புகளும் ஆரம்பிக்கப்படும்:

விவரங்களுக்கு:

சாம் வெஸ்லி

சேர்ஜ் முன் ஒழுங்கை

சிங்கம் லேன், உடுவில்.

(28872)



31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 03 07 1935

மறைவு: 13 12 1993

அமரர் கனகசபை பத்மராசா

கடந்த 13-12-93 இல் சிவபதமடைந்த திரு. க. பத்மராசா அவர்கள் உரும்பராய், ஊரெழு கிராம சபை, பட்டினசபை ஆகியவற்றின் தலைவராக ஒன்பது ஆண்டு காலம் இருந்து இவ்விரு ஊர் மக்களுக்கும் அருஞ்சேவை புரிந்தவர். அன்பாகவும், பண்பாகவும் பழகும் சுபாவத்தால் எல்லோரது மனதிலும் இடம் பெற்றுக் கொண்டவர். உரும்பராய் வடக்கு கணேசா சனசமூக நிலையத்திலும், கிராம முன்னேற்றச் சங்கத்திலும் நிருவாக உறுப்பினராக இருந்து நற்பணியாற்றியவர். அவரது சேவையை மனமாரப் போற்றி அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்தித்து அஞ்சலி செய்கின்றோம்.

கணேசா சனசமூக நிலையம்-
கிராம முன்னேற்றச் சங்கம்.

உரும்பராய் வடக்கு. (28869)


## மரண அறிவித்தல்

திருமதி

அருளம்மா ஞானப்பிரகாசம்

(செல்லம்)

திருமதி அருளம்மா ஞானப்பிரகாசம் 04.01.94 இல் காலமானார்.

இவர் காலஞ் சென்ற மடுத்தின் ஞானப்பிரகாசம்(பொன்னுத்துரை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற திருமதி டெய்சி சூசைப்பிள்ளை, திருமதி விக்ரோறியா லில்லி ஸ்ரனிஸ்லஸ் (இளைப்பாறிய உப அதிபர், பாசையூர் சென். அன்ரனிஸ் மகாவித்தியாலயம்), அருட்தந்தை எட்மன் மைக்கல் (அ.ம.தி.)ஆகியோரின் தாயாரும்,காலஞ் சென்றவர்களான பகுபதி செல்லையா, பகுபதி இராசையா ஆகியோரின் சகோதரியும், காலஞ் சென்ற சந்தியாப்பிள்ளை சூசைப்பிள்ளை, பிலிப்ஸ்ரனிஸ்லஸ் ஆகியோரின் மாமியும், பெஞ்சமின் இம்மனுவல், திருமதி மேரி இராணி இம்மனுவல், சூசைப்பிள்ளை றெஜினோல்ட் றவிச்சந்திரன், திருமதி சாந்தினி றவிச்சந்திரன் ஆகியோரின் பேர்த்தியும், பிரதீபன், தீபா, சோபா, ஜனார்த்தனி, றுக்மா, றேமா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 50, பழைய பூங்கா வீதியிலிருந்து இன்று புதன்கிழமை (12.01.94) பிற்பகல் 3.15 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பேராலய திருப்பலியின் பின் புனித கொஞ்சேஸ்ரி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்!
அருட்தந்தை
எட்மன் மைக்கல்
(அ.ம.தி.)
பிரதாஸ்'
பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (28906)

## மரண அறிவித்தல்

சின்னத்தம்பி தேவநேசன்

(BUILDING CONTRACTOR)

தெற்கு நவாலியூரைச் சேர்ந்த சின்னத்தம்பி தேவநேசன் காலமானார். அன்னார் காலஞ்சென்ற பாக்கியம் பெயித் இராசம்மாவின் அன்புக்கணவரும், பரமநாதன், அற்புதநாதன் (உதயன்), அற்புதசீலன் ஆகியோரின் தந்தையுமாவார். அன்னாரின் அடக்க ஆராதனை இன்று புதன்கிழமை (12.01.94) பி ப. 2.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக நவாலி C.S.I சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;

தெற்கு நவாலியூர், சி.யெ. அற்புதநாதன்
மானிப்பாய். (மகன்)

(C-6955)

## மாணிக்கம் அப்புத்துரை

வசந்தி பவனம் கோண்டாவிலைச் சேர்ந்த மாணிக்கம் அப்புத்துரை காலமாகி விட்டார்.

அன்னார் மங்கயர்க்கரசியின் அன்புக் கணவரும், பாலசாந்தினி பாஸ்கரதேவன் (கனடா), வரதராயன் (ஜேர்மனி), வசந்தினி லோகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பாஸ்கரதேவன் (கனடா), கிரியா வரதராயன் (ஜேர்மனி), லோகேஸ்வரன் ஆகியோரின் மாமனாரும், சஞ்சீவ், சிவானி, ஜானகி (கன்டா), கஜன், ஜெகன் (ஜேர்மனி) ஆகியோரின் பேரனும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

திருமதி மங்கயர்க்கரசி அப்புத்துரை
"வசந்தி பவனம்" (மனைவி)
நெட்டிலிப்பாய்,
கோண்டாவில். (28905)

## கந்தையா வேலுப்பிள்ளை

புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நல்லூரை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய கந்தையா வேலுப்பிள்ளை 11-01-94 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ் சென்ற நாகரெத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற கந்தையா கதிராசிப் பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ் சென்ற கதிரவேலு செல்லமுத்துவின் அன்பு மருமகனும், காலஞ் சென்ற தம்பு, சிவகுரு ஆகியோரின் சகோதரனும், தனலட்சுமியின் சிறிய தகப்பனாரும் நாகராசாவின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளுக்காக பூதவுடல் 12-01-94 (இன்று) பிற்பகல் 3-00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து கோம்பயன் மணல் மயானதிற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்!
நா. தனலட்சுமி
(பெறாமகள்)

131/4, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (28904)

இப்பத்திரிகை: நியூ உதயன் பப்ளிக்கேசன் —(பிறைவேற்) லிமிடெட் [illegible] பிரதி, [illegible] இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 12 - 01 - 1994 இல் அதிபர் [illegible] வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org